*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **19 நவம்பர் 2022**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அச்சு & தொலைக்காட்சி பத்திரிக்கையாளர்கள் சங்கம் சார்பில் ஓட்டல் கிரீன் பேலஸில் நடைபெற்ற பத்திரிகையாளர் தின விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பத்திரிகையாளர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம் மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு A. நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு P.M.L. கல்யாண சுந்தரம் திரு ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- அவசர வேலைகளுக்கு மத்தியிலும் பத்திரிக்கை சகோதரர்களின் அன்பு என்னை கட்டிப்ப போட்டு இந்த விழாவல் கலந்து கொள்ளச் செய்தது.
- பத்திரிக்கையாளர்கள் கொரோனா பெருந்தொற்றுக் காலத்திர் மிகவும் சிரமப்பட்டு பணியாற்றினார்கள். அவர்கள் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதால் தான் மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். காற்று கூட புக முடியாத இடங்களில் பத்திரிகை செய்திகளும் தொலைக்காட்சிகளும் நுழைந்தன.
- பத்திரிகையாளர்கள் இங்கே பேசும் போது தன்னம்பிக்கை குறைபாட்டை பார்த்தேன். பத்திரிகையாளர்களுக்கு பக்கபலமாக அரசு இருக்கிறது. அவர்களுக்கான தேவைகளை செய்வதில் முன்பின் காலதாமதம் ஆகலாம். முதன் முதலாக பத்திரிக்கையாளர்களை முன்களப்பணியாளர்களாக அறிவித்து முன்னுரிமை பட்டியலில் சேர்ந்து தடுப்பூசியை அறிவித்தது புதுச்சேரி அரசுதான் என்பது அனைவருக்கும் தெரியும்.
- பல கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள். ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்கான அங்கீகாரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். அதை பேசிக்கொண்டு இருக்கிறோம். நிர்வாக ரீதியாக சில வழிமுறைகளை சரி செய்து அவர்களுக்கான உதவியை செய்ய வேண்டும் என்று கோரிக்கையை வைத்திருக்கிறோம். நிர்வாக காரணங்களுக்காக அதனை உடனே அறிவிக்க முடியவில்லை என்றாலும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.
- அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உடல் நலத்துடன் இருக்க வேண்டும். நான்காவது தூணாக மதிக்கப்படும் பத்திரிக்கைதுறையில் இருக்கும் பத்திரிக்கையாளர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் அரசு புரிந்து வைத்திருக்கிறது. உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நியாயமாக பரிசளிக்கப்படும்.